# பொதுக்காலம் 11 ஆம் வாரம்

## திருவழிபாடு ஆண்டு B

**இன்றைய வாசகங்கள்:**

இறைவாக்கினர் எசேக்கியேல் நூலிலிருந்து வாசகம். 17: 22-24,
பதிலுரைப்பாடல் திபா. 92: 1-2, 12-15,
திருத்தூதர் பவுல் கொரிந்தியருக்கு எழுதிய
இரண்டாம் திருமுகத்திலிருந்து வாசகம். 5: 6-10,
மாற்கு எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம் 4: 26-34

## திருப்பலி முன்னுரை:

ஆண்டவருக்கு நன்றியுரைப்பது நன்று: உன்னதரே! உமது பெயரைப் புகழ்ந்து பாடுவது நன்று.

இறைஇயேசுவின் நாமத்தில் அனைவருக்கும் இனிய நல்வாழ்த்துக்கள். ஆண்டின் 11ஆம் ஞாயிறு. இன்றைய வாசகங்கள் அனைத்தும் இறைவனின் மாட்சிமையை நமக்கு எடுத்துக்கூறும் வகையில் அமைந்தது சிறப்பான ஒன்றாகும்.

இளங்கொழுந்து ஒன்றிலிருந்து பெரிய மரத்தை வளரச் செய்து அதன் நிழல்களில் பறவைகள் வந்து தங்கும்படி செய்கிறார் தந்தையாம் இறைவன். நாம் இவ்வுலகில் வாழ்ந்தாலும் கிறிஸ்துவின் நம்பிக்கையில் வாழ்கிறோம். கடுகு விதை சிறியதாக இருந்தாலும் பெரிய மரமாகிவிடுகிறது. விதைப்பவர் முயற்சி இல்லாமலே விதைகள் வளர்ந்து பலன் அளிக்கின்றன. இவ்வாறாக இறைவனின் திட்டம் அமையும் போது நாம் எவ்வாறு அவரின் திட்டத்தை நிறை வேற்றுகிறோம்? கிறிஸ்துவின் நீதிமன்றத்தில் என்ன கைமாறு பெறுவோம்? என்ற சிந்தனையோடு அவருடைய வார்த்தையின்படி வாழ உறுதி கொண்டவர்களாய் இத்திருப்பலியில் பங்கேற்போம்.

விசுவாசிகள் மன்றாட்டுகள்:

விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.

பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

1. திருச்சபைக்காக:

கடவுளின் நம்பிக்கை தரும் வாக்குறிதியாக திகழும் திருச்சபை கேதுருமரம் போல் தளிர்விட்டு தழைத்து மேலோங்கிட இறைநம்பிக்கையால் தேர்ந்துக் கொள்ளப்பட்ட திருச்சபையின் தலைவர் திருத்தந்தை பிரான்சிஸ் அவரது ஒளியில் மிளிரும் ஆயர்கள் குருக்கள் இருபால் துறவியர்கள் மற்றும் பொதுநிலையினர். தாம் தேர்ந்து கொண்ட அழைப்பிற்கேற்ற வாழ்க்கை வாழ வரம் வேண்டி இறைவா உமை மன்றாடுகிறோம்.

2. குடும்பங்களுக்காக:

நசரேத்தூர் திருக்குடும்பத்தை முன்னிறுத்தி ஆதிபெற்றோர் முதல் இன்றுவரை பல குடும்பங்களை உருவாக்கி மானிடரை வழி நடத்திய இறைவா! இன்றைய சூழலில் குடும்பங்கள் தோறும் அன்பெனும் உம் திருமகனின் கட்டளைபடி இறை - மனித - உறவில் நாளும் செழித்தோங்கிட வரம் வேண்டி இறைவா உமை மன்றாடுகிறோம்.

3. முதியோர்களுக்காக :

அன்பின் இறைவா! உம் மக்கள் இன்றைய சூழலில் வயது முதிர்ந்தவர்களை பேணி காக்கும் நிலைமாறி, முதியோர் இல்லங்கள் பெருகிவரும் நிலையில் அவர்களுக்கு நீர் தந்தையாகவும், தாயாகவும் நின்று, தாங்கள் கடந்து வந்த பாதையைக் குறித்து அவர்கள் துன்புறும் வேளையில் அவர்களுக்கு அன்பினை பொழிந்து அரவணைத்தும் நல் ஆயனாக இருந்து வழி நடத்திட வரம் வேண்டி இறைவா உமை மன்றாடுகிறோம்.

4. எல்லாம் வல்லவரான தந்தையே இறைவா!

உம்முடைய மக்களாகிய எங்களுக்கும்: உம்முடைய நெறிமுறைகளைப் பின்பற்றி, உம்மீது விசுவாசம் கொண்டு, உம்முடைய வார்த்தையின்படி நீதிமான்களாக வாழும் நன் மனதை அளித்தருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

5. உயிரைச் சாவினின்று காக்கின்ற தந்தையே இறைவா!

நோய், விரக்தி, சிறைவாழ்வு, வதைமுகாம் இவற்றுள் நின்று மரணத்தோடு போராடிக் கொண்டிருக்கும் அனைவரை யும் காத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.